| O.S.No. 236/2023 | PW1 : திரு. சுப்பிரமணி<br>த/பெ. திரு. செல்லகுட்டி | 12-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நானும் பிரதிவாதிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது பக்கத்து நிலத்துக்காரர்கள். என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 30 செண்ட்தான் கொடுத்தேன், ஆனால் 60 செண்ட் என்று எழுதி வாங்கிக்கொண்டதால் வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்தின் விவரம் தெரியும். வழக்கு சொத்து 1 ஏக்கர், 30 செண்ட் ஆகும். சர்வே எண். 102/3 ஆகும்.

2. நானும், எனது தம்பி முனுசாமியும் 1997–ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் A ஷெட்யூல் சொத்தாக 1 ஏக்கர் 10 செண்ட் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு மொத்தம் 2 மகன்கள், ஒரு மகள் வாரிசுகள், மகள் இறந்துவிட்டாள். என் மகளுக்கு திருமணம் செய்வதற்கு முன்பாக என்னுடைய பக்கத்து நிலத்துக்காரர் எல்லப்பனிடம் மகளின் திருமண செலவிற்கு பணம் கேட்டேன் என்றால் சரிதான். எனக்கு படிப்பறிவு இல்லை, என் மகன் குப்பன் படித்துள்ளார். நான் பிரதிவாதிகளின் தந்தை எல்லப்பனுக்கு எனக்கு A ஷெட்யூலாக ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 10 செண்ட்டில் சர்வே எண். 132/3–ல் 6 செண்ட்டும், சர்வே எண். 132/4–ல் 6 செண்ட்டும், சர்வே எண். 132/4–ல் 15 செண்ட்டிலிருந்து 6 செண்ட்டும், சர்வே எண். 120/4A/10–ல் 45 செண்ட்டில் 26 செண்ட், சர்வே எண். 120/4A/14–ல் 43 செண்ட்டில் 8 செண்ட், சர்வே எண். 119/10–ல் 4 செண்ட், சர்வே எண். 119/11–ல் 4 செண்ட், ஆக மொத்தம் 60 செண்ட் கிரையம் கொடுத்தேன் என்றாலும்,

அதில் எனது மகன் குப்பனும் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் சரியல்ல, நான் 30 செண்ட் மட்டுமே கிரையம் கொடுத்தேன். அந்த பத்திரத்தினை செய்யாறு சார்பதிவாளர் அலுவலகத்தில் 1066/2007 – பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரைய பதிவு செய்த மறுநாளே நான் 60 செண்ட்டினை சுவாதீனம் பிரதிவாதிகளின் தந்தையிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் 30 செண்ட்டினை ஒப்படைத்தேன்.

3. பிரதிவாதியின் தந்தைக்கு கொடுத்த வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் எனது உறவினர் இன்னொரு சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தின்படி பிரதிவாதிகளின் தந்தை 17 ஆண்டு காலமாக அனுபவித்து வந்தார் என்றாலும், அவருக்கு பிறகு பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் 30 செண்ட்டினைத்தான் அனுபவித்து வருகிறார்கள். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் உள்ள அனைத்து சங்கதிகளையும் எனக்கும் எனது மகனுக்கும் படித்து காண்பித்த பிறகுதான் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் கண்டுள்ள கிரைய தொகை ரூ.42,000/- பிரதிவாதிகளின் தந்தை என்னிடம் கொடுத்து நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அது இல்லாமல் 2 சவரன் நகையும் பிரதிவாதிகளின் தந்தை கொடுத்தார். 19-12-2013-ல் நான் பிரதிவாதிகளின் தந்தை எல்லப்பன் மீது சொத்து சம்மந்தமாக கிரைய பாக்கி தொகை குறைவு என்று சொல்லி செய்யாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின்பேரில் பஞ்சாயத்து செய்யப்பட்டு எல்லப்பன் மனிதாபிபமானத்தின் அடிப்படையில் ரூ.20,000/- கொடுத்தார் என்றால் சரிதான்.

5. 19–12–2013 தேதியில் ரூ.20,000/– பெற்றுக்கொண்டு தாவா சொத்தை பொருத்து காவல் நிலையமோ, நீதிமன்றமோ செல்லமாட்டேன் என்று சொல்லி நானும், எனது மகனும் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். நானும், பிரதிவாதிகளும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தந்தை இறந்துவிட்டதற்கு பிறகு பிரதிவாதிகளின் மீது எனது சமுதாயத்தை இழிவுபடுத்தியதாக 3, 4 புகார்கள் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் உண்மை இல்லை என்று சொல்லி காவல் நிலையத்தார் முடித்து வைத்தார்கள் என்றால் அது தெரியாது.

6. நான் தாவா சொத்தை பொருத்து பட்டா பிரதிவாதிகளின் பெயரில் மாற்றக்கூடாது என்று தொடர்ச்சியாக புகார் கொடுத்து வருகிறேன் என்றால் சரிதான். நானும், என் மகனும் சேர்ந்து பிரதிவாதிகள் தாவா சொத்தில் பயிர் செய்து வந்ததை அழித்தோம் என்று சொன்னால் சரியல்ல. தொடர்ச்சியாக நான் புகார் கொடுத்திருந்ததால் நீதிமன்றத்தில் போய் பார்த்துக்க சொல்லி சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான்.

7. சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற தீய நோக்கத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவாவில் சொத்து விவரத்தில் எனக்கு பாகமாக வந்த மதிப்பை விட அதிகமாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் தந்தைக்கு 60 செண்ட்டினை கிரையம் கொடுத்துவிட்டு அதற்கான கிரைய தொகையினை பெற்றுக்கொண்டும், மேற்க்கொண்டு தொகையினை பெற்றுக்கொண்டும், பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. பிரதிவாதிகளை அலைக்கழிக்கவேண்டும் என்பதற்காக இத்தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. தாவாவில் கேட்டுள்ள பரிகாரமும், சொத்து விவரமும் தவறானது என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் மோசடியாக கிரையம் வாங்கவில்லை என்றாலும், நான்தான் கிரையம் கொடுத்துவிட்டு பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமையாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த 60 செண்ட்டை தவிர்த்து மீதம் உள்ள சொத்தை பொருத்து பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாவாவினை பிரதிவாதிகளின் சிறப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**